20164

**9315**

பதிவு எண்
*Register Number*

இரண்டாம் ஆண்டு / **Second Year**

# கற்றலை எளிதாக்குதலும், மேம்படுத்துதலும்
# FACILITATING AND ENHANCING LEARNING

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

Time Allowed : 3 Hours ] [ Maximum Marks : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிகோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **15x2=30**

**Note :** Answer **all** the questions **not** exceeding **100** words each.

**1.** கல்வியில் பயன்படுத்தப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களை குறிப்பிடுக.
Mention the different technologies used in education.

**2.** ஒளிபுகும் தாள்கள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு முறைகளை பட்டியலிடுக.
List out the different methods used in preparation of OHP sheets.

[ திருப்புக / Turn over

3. சாதாரண கண்ணாடி நழுவத்தை எவ்வாறு தயாரிப்பீர் ?
How will you prepare plain glass slide ?

4. மெல்லக் கற்போரின் கற்றலடைவை மேம்படுத்துவதில் ஆசிரியரின் பங்கு என்ன ?
What is the role of teacher in developing slow learners ?

5. வகுப்பறைச் சூழல் மதிப்பீடு என்றால் என்ன ?
What is mean by evaluation of a classroom climate ?

6. பல்நிலைக் கற்பித்தல் என்றால் என்ன ?
What is the meaning of multilevel teaching ?

7. செயல்வழிக் கற்றலில் கற்றல் அட்டைகளின் முக்கியத்துவம் என்ன ?
Write the importance of cards in Activity Based Learning.

8. கற்பித்தல் நோக்கங்களின் மூன்று புலங்கள் யாவை ?
What are the three domains in teaching objectives ?

9. பண்பாடு சார்ந்த விழுமம் பற்றி எழுதுக.
Write about the cultural value.

10. கற்பவர்களின் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் நான்கு கூறுகளை குறிப்பிடுக.
Mention the four factors that help for behavioural changes of the learners.

11. வகுப்பறையில் வாய்மொழித் தேர்வின் மூலம் மாணவர்களைச் சோதித்தறிய இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
Give any two examples of assessing students in class with the help of oral tests.

12. தேர்ந்தெடுப்பு வகை வினாக்களின் எவையேனும் நான்கினை எழுதுக.
List out any 4 types of selection type question.

13. இந்திய அரசியல் சாசனத்தின் 45 -ஆவது பிரிவு பற்றி எழுதுக.
Write about Indian Constitution Section 45.

14. குறைந்தளவு பார்வைத்திறன் - வரையறு.
Define Low Vision Impairment.

15. மனவளர்ச்சிக் குறைபாட்டிற்கான காரணங்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.
Write any four causes for Mental Retardation.

20164 20164 20164

## பகுதி - II / PART - II

**குறிப்பு : எவையேனும் பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x4=40**

**Note :** Answer **any ten** questions **not** exceeding **200** words each.

**16.** கல்வியில் தொழில்நுட்பம், கல்வியின் தொழில்நுட்பம் - வேறுபடுத்துக.
Differentiate Technology in education and Technology of education.

**17.** கற்பித்தலுக்கான ஐந்து முக்கியக் காரணிகள் யாவை ?
Write the five important factors for teaching.

**18.** உனது வகுப்பறையில் மெல்லக் கற்போருக்கான சாதகமான சூழலை எவ்வாறு உருவாக்குவாய் ?
How will you develop a favourable classroom climate for slow learning in your class ?

**19.** மாற்றுத்திறனாளருக்கான வகுப்பறைச் சூழல் - குறிப்பு வரைக.
Write a note on classroom climate for the Disabled.

**20.** பல்வகுப்புப் பயிற்றலில் நேரடிக் கவனிப்பு பற்றி எழுதுக.
Write about direct observation in Multigrade Teaching.

**21.** பல்வகுப்புப் பயிற்றலில் ஆசிரியர் - மாணவர்களுக்கு இடையேயான கற்பித்தல் நிகழ்வுகள் பற்றி விவாதிக்க.
Discuss about the teaching activities between Teacher-Student in multigrade teaching.

**22.** எதிர்மறை மனப்பான்மையில் மாற்றம் - குறிப்பு வரைக.
Write about the changes in Negative Attitude.

**23.** விழுமக்கல்வியின் பொதுநோக்கங்களுள் எவையேனும் நான்கினை விளக்குக.
Explain any four general objectives of value education.

**24.** பண்பு வகை சார்ந்த மதிப்பீட்டின் நிலைகளை மதிப்பிடும் முறைகளுடன் பட்டியலிடுக.
List out the stages of qualitative assessment with suitable procedures.

**25.** சிக்கலுக்கான தீர்வினை அடைய உதவும் படிநிலைகளை விவரி.
Describe the steps available in solving a problem.

**26.** வாசித்தலிலுள்ள பிரச்சினைகளைக் களைவதற்கான குறைதீர் அணுகுமுறைகளைப் பற்றி விளக்குக.
Explain the problem solving approaches in Reading Skills.

**27.** செவித்திறன் குறைபாட்டுக்குக் காரணமாகும் பரம்பரை அல்லாத காரணிகளைக் குறிப்பிடுக.
Write about the non-genetic factors for hearing Impairment.

## பகுதி - III / PART - III

குறிப்பு : கீழ்காணும் **மூன்று** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **3x10=30**

**Note :** Answer the following **three** questions.

**28.** (அ) கருவிப்பெட்டி தயாரித்தல், தயாரிக்கும்போது நினைவிற்கொள்ளவேண்டியவை குறித்து விளக்குக.

**அல்லது**

(ஆ) குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் பற்றி விவரிக்கவும்.

(a) Explain the preparation of Kitbox and what are the points to ponder while preparing the Kitbox ?

**OR**

(b) Describe about Basic Child Rights.

**29.** (அ) உம்முடைய வகுப்பறையில் குழுத்தலைவன் செய்யவேண்டிய பணிகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) கற்றல் கற்பித்தலில் கற்றலை மேம்படுத்த தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.

(a) Explain the duties of a group leader in your classroom.

**OR**

(b) How is information and communication technology useful in enhancing teaching - learning process ?

**30.** (அ) கற்றலை மதிப்பிடல் குறித்து விளக்குக.

**அல்லது**

(ஆ) கற்றல் குறைபாடு உடையவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பின்பற்றவேண்டிய அணுகுமுறைகளை விவரிக்கவும்.

(a) Explain Assessment of learning.

**OR**

(b) Explain the approaches to be followed by the teacher who handles the learning disability students.

- o O o -